# பெரியாழ்வார் திருமொழி 5-1
## வாக்குத் தூய்மை
(நைச்யாநுசந்தானம்)

433 * வாக்குத் தூய்மை இலாமையினாலே * மாதவா உன்னை
வாய்க் கொள்ள மாட்டேன் *
நாக்கு நின்னை அல்லால் அறியாது * நானதஞ்சுவன் என்
வசம் அன்று **
மூர்க்குப் பேசுகின்றான் இவனென்று * முனிவாயேலும் என்
நாவினுக்கு ஆற்றேன் *
காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர் * காரணா கருளக்
கொடியானே (1)

434 சழக்கு நாக்கொடு புன்கவி சொன்னேன் * சங்கு சக்கரம்
ஏந்து கையனே *
பிழைப்பராகிலும் தம்மடியார் சொல் பொறுப்பது * பெரியோர்
கடனன்றே **
விழிக்கும் கண்ணிலேன் நின்கண் மற்றல்லால் *
வேறொருவரோடு என் மனம் பற்றாது *
உழைக்கு ஓர் புள்ளி மிகையன்று கண்டாய் * ஊழி
ஏழுலகுண்டுமிழ்ந்தானே (2)

435 நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன் * நாரணா என்னும்
இத்தனை அல்லால் *
புன்மையால் உன்னைப் புள்ளுவம் பேசிப் * புகழ்வானன்று
கண்டாய் திருமாலே **
உன்னுமாறு உன்னை ஒன்றும் அறியேன் * ஓவாதே நமோ
நாரணா என்பன் *
வன்மையாவது உன் கோயிலில் வாழும் * வைட்டணவன்
என்னும் வன்மை கண்டாயே (3)

436 நெடுமையால் உலகேழும் அளந்தாய் * நின்மலா நெடியாய்
அடியேனைக் *
குடிமை கொள்வதற்கு ஐயுற வேண்டா * கூறை சோறு இவை
வேண்டுவதில்லை **
அடிமை என்னும் அக்கோயின்மையாலே * அங்கங்கே அவை
போதரும் கண்டாய் *
கொடுமைக் கஞ்சனைக் கொன்று நின் தாதை * கோத்தவன்
தளைகோள் விடுத்தானே (4)

437 தோட்டம் இல்லவள் ஆத்தொழு ஓடை * துடவையும் கிணறும்
இவை எல்லாம் *
வாட்டமின்றி உன் பொன்னடிக் கீழே * வளைப்பகம் வகுத்துக்
கொண்டிருந்தேன் **
நாட்டு மானிடத்தோடு எனக்கு அரிது * நச்சுவார் பலர்
கேழல் ஒன்றாகி *
கோட்டுமண் கொண்ட கொள்கையினானே * குஞ்சரம் வீழக்
கொம்பொசித்தானே (5)

438 கண்ணா நான்முகனைப் படைத்தானே * காரணா கரியாய்
அடியேன் நான் *
உண்ணா நாள் பசியாவதொன்றில்லை * ஓவாதே நமோ
நாரணா என்று **
எண்ணா நாளும் இருக்கெசுச் சாம வேத * நாண்மலர்
கொண்டு உன பாதம்
நண்ணா நாள் * அவை தத்துறுமாகில் * அன்று எனக்கு
அவை பட்டினி நாளே (6)

439 வெள்ளை வெள்ளத்தின் மேல் ஒரு பாம்பை * மெத்தையாக
விரித்து * அதன் மேலே
கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம் * காணலாங்கொல்
என்றாசையினாலே **
உள்ளம் சோர உகந்தெதிர் விம்மி * உரோம கூபங்களாய்
கண்ண நீர்கள் *
துள்ளம் சோரத் துயிலணை கொள்ளேன் * சொல்லாய் யான்
உன்னைத் தத்துறுமாறே (7)

440 வண்ணமால் வரையே குடையாக * மாரி காத்தவனே மதுசூதா *
கண்ணனே கரிகோள் விடுத்தானே * காரணா களிறட்ட
பிரானே **
எண்ணுவார் இடரைக் களைவானே * ஏத்தரும் பெருங்க்
கீர்த்தியினானே *
நண்ணி நான் உன்னை நாள்தொறும் ஏத்தும் * நன்மையே
அருள் செய் எம்பிரானே (8)

441 நம்பனே நவின்றேத்த வல்லார்கள் * நாதனே நரசிங்கம்
அதானாய் *
உம்பர் கோன் உலகேழும் அளந்தாய் * ஊழியாயினாய் ஆழி
முன்னேந்தி **

கம்பமா கரிகோள் விடுத்தானே * காரணா கடலைக்
கடைந்தானே *
எம்பிரான் என்னை ஆளுடைத்தேனே * ஏழையேன் இடரைக்
களையாயே (9)

442 * காமர் தாதை கருதலர் சிங்கம் * காண இனிய கருங்குழல்
குட்டன் *
வாமனன் என் மரகத வண்ணன் * மாதவன் மதுசூதனன்
தன்னை **
சேமநன்கமரும் புதுவையர் கோன் * விட்டுசித்தன் வியன் தமிழ்
பத்தும் *
நாமமென்று நவின்றுரைப்பார்கள் * நண்ணுவார் ஒல்லை
நாரணனுலகே (10)